# TNPSC GROUP II MAIN EXAM 2023

## MODEL EXAM - I

### கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

### பத்தாம் வகுப்புத் தரம்

*கால அளவு மூன்று மணி நேரம்*
*Time Allowed: Three Hours*

*மொத்த மதிப்பெண்கள்: 100*
*Maximum Marks: 100*

---

வினாக்களுக்கான விதிமுறைகள்

வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் தமிழில் (தமிழில் எழுத்தில்) மட்டுமே வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions:

- All questions are to be attempted.
- The number of marks carried by a question / part is indicated against it.
- Answers must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.
- Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.
- Any page or portion of the page left blank in the Question-cm-Answer Booklet must be clearly struck off.

Q. NO. 1 (5) திருக்குறள் ஓர் அறநூல்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப்புகட்டிக் குறுகத் தறித்த திருக்குறளானது வாழ்வாற்கு தேவையான அறங்களைக் கொண்டு அறநூலாக உள்ளது.

ஏற்றத்தாழ்வு அற்ற அறம்:

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பிறப்பால் அனைவரும் சமம் என்ற கருத்தை வலியுறுத்தினார். இதனால் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுதல் தகாதது என்று கூறுகிறார். இதனை பின்வரும் குறளில் காணலாம்.

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்.

கல்வியால் அறம் கூறல்:

திருவள்ளுவர் கல்வி கற்பதே ஒரு அறம் என்று கூறுவதோடு இல்லாமல், கற்ற அறத்தை வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்கிறார். இதனால் மக்கள் வாழ்வு முழுமையும் அறம் நிறைந்ததாக விளங்கும். இதையே பின்வரும் குறளில் கூறுகிறார்

> கற்க கசடற கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக.

இல்லறத்தில் அறம் கூறல்:

இல்லற வாழ்விற்கு அடிப்படையானது

கணவன் மனைவி இருவருமே அறத்தின் துணை கொண்டு நடத்த வேண்டும் என்று தெரிவிக்கிறது. இதனால் இல்லறத்தில் நல்லறம் சிறந்து வாழ்வு செம்மையுறும் என திருக்குறள் கூறுகிறது.

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.

அறம் சார்ந்த அரசியல் கூறல்.

ஒரு நாட்டினை ஆளும் மன்னன் தன் மக்களை அறத்தை முதலாகக் கொண்டு ஆட்சி புரிய வேண்டும். அவ்வாறு நடைபெற்றால் அந்த ஆட்சி செம்மையுற்று விளங்கும் என்று திருக்குறள் கூறுகிறது. அறம் சார்ந்த ஆட்சியே நீண்டகாலம் நீடிக்கும் என்கிறது திருக்குறள்.

> வான்நோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்
> கோல்நோக்கி வாழும் குடி.

நட்பிலும் அறம் போற்றல்:

திருக்குறள் தலையாய உறவுகளுள் ஒன்று நட்பு என்று கூறுகின்றது. இத்தகைய நட்பில் அறம் வேண்டும் என்கிறது திருக்குறள். இதிலே அறம் உண்டானால் வாழ்வு செம்மையுறும் என்று கூறுகிறது.

> முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

<u>வாழ்வில் அறம் வலியுறுத்தல்:</u>

மக்கள் அனைவருக்கும் ஒரு பிறவியே என்பதால் இத்தகைய வாழ்வில் அறம் சார்ந்த நடைமுறைகளைக் கொள்ள வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. அதுவே பயனான வாழ்வாகவும் திருக்குறள் கூறுகிறது.

> அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு.

<u>சொல்லிலும் அறம் கூறல்:</u>

திருக்குறள் நாம் பேசும் சொல்லிலும் அறத்தை கடைபிடிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஏனெனில் அது மக்கள் அனைவருக்கும் பயன்தரும் விதமாக உள்ளது. எனவே அறம் சார்ந்த சொல்லைக் கூற வேண்டும் என்று திருக்குறள் அறிவுறுத்துகிறது.

> சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
> சொல்லில் பயனிலாச் சொல்.

<u>புகழ் என்ற அறத்தைப் போற்றல்:</u>

மக்களுக்கு புகழ் என்பது அறம் சார்ந்த செயல்களைக் கடைபிடிப்பதால் வருகிறது. எனவே ஒருவர் அறம் சார்ந்த செயலைச்செய்து புகழ் அடையலாம் என்று திருக்குறள் கூறுகிறது.

> தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

Q. NO. 2

(1)- ஸ்டிராபோ என்பவர் எழுதிய "பூகோள நூல்", பிளினி எழுதிய "உயிரியல் நூல்", தாலமி எழுதிய "பூகோள நூல்" ஆகியவை பண்டைய தமிழர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே கடல் கடந்து வணிகம் மேற்கொண்டதற்கான சான்றுகள் ஆகும்.

(2). அரேபியாவிலிருந்தும் கிரேக்கத்திலிருந்தும் வணிகம் செய்ய வந்தவர்கள் "யவனர்கள்" என்று அழைக்கப்பட்டனர்.

(3). பண்டைத் தமிழகத்தின் கிழக்குகடற்கரைத் துறைமுகங்களாவன கொற்கை, நாகப்பட்டினம், காவேரிப்பூம்பட்டினம், புதுச்சேரி, மரக்காணம் மற்றும் மசூலிப்பட்டினம் முதலியனவாகும்.

(4). மஸ்லின் துணி, ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்கள் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

(5). இந்திய மருந்து என்று மிளகைக் குறிப்பிட்டவர் கிரேக்க மருத்துவரான ஹிப்போகிரேட்டஸ் என்பவர் ஆவார்.

**Q. NO. 3**

ஆடல்கலை, கூத்துக்கலை என்று அழைக்கப்படும் நடனக்கலையானது பழங்காலம் முதல் இருந்து வருகிறது. வெறிக்கூத்து, வள்ளிக்கூத்து, கழிநிலைக் கூத்து எனப் பல வகைப்படும். அரசர்கள் கூத்தர்களைப் பாராட்டிப் பரிசளித்தனர். பண்டைய சிலப்பதிகாரத்தில் நாடக மங்கை தொடர்பான செய்திகளும் இடம் பெற்றுள்ளன. பெண்கள் ஆறு வருடங்கள் நடனப்பயிற்சி பெறுவர். தலைக்கோல் அரிவை என்ற பட்டம் பொதுவியல் வேத்தியல் இரண்டிலும் சிறந்து விளங்குபவருக்கு வழங்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் மாதவி பதினொரு வகையான ஆடல்களை ஆடியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் குன்றக் குரவை ஆய்ச்சியர் குரவை போன்றவை ஆடினர். குணநூல், செயிற்றியம் இசை நுணுக்கம் முதலியவை நடன நூல்களாகும். குன்றக் குரவை குறிஞ்சி நிலத்தில் ஆடுதல். ஆய்ச்சியர் குரவை என்பது முல்லை நிலத்தில் ஆடப்பட்டது. பல்லவர் காலத்தில் முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாசப் பிரகசனம் என்ற நடன நூலை எழுதியுள்ளார். கூத்தபெருமான் என்று சிவபெருமானை நாயன்மார்கள் கூறினர். தஞ்சாவூர் கோயிலில் நடன ஓவியங்களைக் காணலாம்.

கொடுக்கப்பட்ட வார்த்தைகள் - 305
எழுதப்பட்ட வார்த்தைகள் - 101.

Q. NO. 4

ஸ்ரீபெரும்புதூர் :

தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர் என்ற ஊர் பக்தி இயக்கம் சார்ந்த நிகழ்வுகளில் முக்கியப்பங்கு வகிக்கின்றது. வைணவ மதத்தைச் சேர்ந்த ஸ்ரீராமானுஜர் கி.பி. ஏழாம் நூற்றாண்டு இங்கு பிறந்தார். இவர் சமூக சீர்திருத்தம் வேண்டி பக்தி இயக்கத்தை தமிழகத்தில் தொடங்கினார்.

ஸ்ரீராமானுஜர் :

பக்தி இயக்கத்தின் தோற்றத்திற்குக் காரணமாக விளங்கிய ஸ்ரீராமானுஜர் தன் பக்தி சார்ந்த கொள்கைகளை மக்களிடையே பரப்பினார். இதனால் ஆதிசங்கரரின் பக்தி கொள்கை நலிவடைந்து ஸ்ரீராமானுஜரின் கொள்கை பரவியது. இதில் அனைத்து சாதிப்பிரிவினரும் பங்கு கொண்டனர்.

யாதவப்பிரகாசர் :

ஸ்ரீராமானுஜர் யாதவப்பிரகாசர் என்பவரிடம் பாடம் பயின்று மேலும் சில பக்தி சார்ந்த கருத்துக்களை தெரிந்து கொண்டார். இதனால் பல கல்வி கேள்விகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டார் இராமானுஜர். இது அவரது கொள்கை பரவுவதற்கு முக்கிய காரணமாகும்.

யமுனாச்சாரியார் :

யமுனாச்சாரியார் என்ற பக்தி இயக்க

ஆச்சாரியரும் பக்தி இயக்கத்தைப் பரப்ப வழிபட்டார். இதனால் பக்தி இயக்கமானது தமிழகம் மற்றும் பிற பகுதிகளிலும் வேகமாக பரவியது. மக்கள் அனைவரும் பக்தியில் இறங்கினர்.

திருவரங்கம்:

திருவரங்கத்தில் உள்ள ரங்கநாதர் கோவிலில் வைணவ மதம் சார்ந்த கூறுகள் பாதுகாக்கப்பட்டன. மடம் நிறுவி பக்தி இயக்கம் மக்களிடம் பரப்பப்பட்டு வந்தன. எனவே மக்கள் யாவரும் பக்தி இயக்கத்தில் ஈடுபட்டு சமூக சீர்திருத்தக் கருத்துக்களில் பணியாற்றினர். திருவரங்கம் பல பக்தி சார்ந்த குருமார்களை உருவாக்கியது.

மடத்தின் தலைவர்:

ஸ்ரீராமானுஜரின் பக்தி ஆற்றலை அறிந்த கோவில் மடத்தின் தலைவர்கள் அவரையே தலைமை ஏற்று நடத்துமாறு வேண்டினர். இதன் காரணமாக சிறிது நாள் இராமானுஜர் ஸ்ரீரங்கம் மடத்தின் தலைவராக விளங்கினார். மேலும் பக்தி மதம் சார்ந்த கருத்துக்களையும் மக்களிடம் பரப்ப வந்தார். மடத்தின் பணிகள் சிறந்து விளங்கின.

விசிஷ்டாத்வைதம்:

ஸ்ரீராமானுஜர் ஆதி சங்கரரின் கொள்கை-யில் இருந்து மாறுபட்ட கொள்கையை பின்பற்றினார்.

அதாவது கடவுளும் மனிதனும் ஒன்றே என்ற கொள்கையே விசிஷ்டாத்வைதம் ஆகும். இதனால் இக்கொள்கை அனைத்து வகையான மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மக்களுக்குச் செய்யும் வழிபாடு இறைவனுக்குச் செய்யும் வழிபாடே என்று கூறினர்.

வருணாசிரம அமைப்புகளுக்கு எதிரான செயல்பாடுகள்:

ஸ்ரீராமானுசர் சாதிய வருணாசிரமக் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்தார். இதனால் இவர் தொடங்கிய பக்தி இயக்கமானது அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவானது என்ற கொள்கையைக் கடைபிடித்தார். இதன் காரணமாக அனைத்து பிரிவு மக்களும் விசிஷ்டாத்வைதக் கொள்கையில் பின்பற்றினர்.

ஆலய நுழைவு:

பிற்படுத்தோரைக் கோயிலுக்குள் நுழைய தடை செய்வதை எதிர்த்த இராமானுசர் அதை எதிர்த்து ஆலய நுழைவுப் போராட்டத்தையும் தொடங்கினார். இது சாதிய முறைகளுக்கு எதிரான போராட்டமாகும்.

சமூகசீர்திருத்தங்கள்:

வைணவ சமயம் சார்பாக பலவகை சீர்திருத்தங்களும் தொடங்கப்பட்டன. சமபந்திமுறை, ஆலய நுழைவு சீர்திருத்தம், குழந்தைத் திருமண [illegible] போன்றவை ஆகும்.

**Q. NO. 5**

During Sangam Period, agriculture was considered as the livelihood for people. Paddy, Sugarcane, Millets are cultivated. Wetland and dryland farm practices are held in sangam period. Irrigation for paddy has been assisted through river, ponds and lakes. Millets and pulses are cultivated in dryland. Red rice, white rice and Five-type rice has been cultivated. The Excavation on Adichanalloor and poronthal has confirmed that ancient tamils are cultivated rice. The shifting cultivation practice is called as punam. Cattle rearing cow, goat, bulls are grown for ancient people's livelihood.

**Q. NO. 6**

மறைமலை அடிகள் தூய்மையான தமிழ் சொற்களைப் பேசுவதிலும், வடமொழியின் தாக்கத்தினை தமிழ்மொழியில் இருந்து களைவதிலும் முன்னோடியாக விளங்கினார். இந்த இயக்கமானது தமிழ்ப் பண்பாட்டில் குறிப்பாக மொழி மற்றும் இலக்கியங்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இத்தகைய செயல்முறை நடைபெற்றாலும், இது 1916ம் ஆண்டு நடைபெற்ற தனித்தமிழ் இயக்கம் மூலம் முக்கியத்துவம் பெற்றது. மறைமலை அடிகளின் மகளாகிய நீலாம்பிகை தனித்தமிழ் இயக்கம் வளர முக்கியப்பங்கு ஆற்றினார். வேதாசலம்

தூய தமிழில் மாற்றிக்கொண்டார். அவருடைய ~~நசுழிக~~ நாளிதழான 'ஞானசாகரம்' என்பதை அறிவுக்கடல் என்று மாற்றினார். அவரது சமரச சன்மார்க்க சங்கத்தை பொதுநிலைக் கழகம் என்று மாற்றினார். இவ்வியக்கமானது இந்தி மற்றும் வடமொழி மற்றும் பிராமணர்களின் ஆதிக்கம் தமிழ்நாட்டில் இருப்பதை எதிர்த்தது. நீலாம்பிகை வடமொழிக்கு நிகரான தமிழ்மொழிகளைக் கொண்டு ஓர் அகராதியைப் படைத்தார். இது தமிழ்நாட்டில் சடுகே சீர்திருத்த இயக்கங்கள் தோன்றவும் துணைபுரிந்தது. வடமொழி எதிர்ப்பு மற்றும் பிராமண ஆதிக்க எதிர்ப்பு போன்றவற்றையும் வலுபெறச் செய்தது.

Q. NO. 7

தமிழ்நாடு அரசு.

நாள் மார்ச் 27 2020

அனுப்புநர்: கடித எண் 2201\5/7.

அரசு முதன்மைச் செயலாளர்
தலைமைச் செயலகம்
சென்னை - 600018

பெறுநர்
தேசிய நலக்குழுமம்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்
மருத்துவக்கல்வி இயக்குநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத் துறை தலைவர்
தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத் தலைவர்.

ஐயா,

பொருள்: சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க "நம்மைக் காக்கும்" திட்டம் தொடர்பாக

பார்வை: (1) கடித எண் 2210/17 ஜனவரி 11 2020
(2) கடித எண் 2208/17 ஜனவரி 12 2022

மேற்கண்ட கடிதங்களில் அரசின் "சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கும் நோக்கில் "நம்மைக் காக்கும் திட்டம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

எனவே இது தொடர்பாக தங்கள்

திட்டம் தொடர்பாக தெரியப்படுத்தி செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பாக கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புதலையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மிக்க நன்றி

தங்கள் நம்பிக்கையுள்ள
அரசு முதன்மைச்செயலாளர்

நகல் அனுப்புதல் வரைவும்: (அனுப்பப்படுகிறது)
- தேசிய நலக்குழுமம்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்
மருத்துவக் கல்வி இயக்ககம்
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை
தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம்.

**Q. NO. 8**

(a) 1) மக்களுக்குத் தேவையான வாழ்வியல் நெறிகள் திருக்குறளில் கூறப்பட்டுள்ளன.

2) தமிழகத்தில் சித்தர் பலர் வாழ்ந்ததாக வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது.

3) உலகம் என்பது பல நாடுகளைக் கொண்டுள்ள பரந்த இடமாகும்.

4) தமிழர்களின் தொன்மை சார்ந்த பண்பாடுகளை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

(B) 1) எரியும் பாறையை அவன் எறிந்தான்.

2) அரன் கொண்டவனாக இருந்தாலும் அறன் புரிதல் வேண்டும்.

3) சேணைகளைக் கொண்ட மன்னன் தன் தந்தையால் சேனை பெற்றான்.

4) தொட்டிலில் தூங்கிய குழவியை குளவி கொட்டியது

(C) 1) இல்லாது + இயங்கும்.
2) நன்மை + அறிவு
3) உள்ளுவது + எல்லாம்
4) எம்மை + அங்கே.

APPOLLO STUDY CENTRE

SECTION



TNPSC MAIN DESCRIPTIVE

(D): 1) நான் கனவு கண்டிலேன்.

2) நீ ஓவியம் நன்றாக வரைந்திலை.

3) எங்கள் ஊரில் மஞ்சுவிரட்டு நடைபெறவில்லை.

4) குதிரைகள் ஓடவில்லை.

(E) 1) சேவல் ~~கூவ~~ காலை பொழுது புலர்ந்தது.

2) கவிஞர் செய்யுள் இயற்றினார்.

3) பனை ஓலையால் கூரை வேய்ந்தனர்.

4) தென்னந்தோப்பில் தென்னம்பிள்ளை நட்டேன்.

4